DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 100/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW1

| | | |
|---|---|---|
| Name | : | **ரெங்கராஜன்** |
| Father/Husband Name | : | வேணுகோபால் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024.

முதல் விசாரணை–

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிரமாணப்பத்திரிக்கை ஏற்கப்பட்டது. 06.10.1983 தேதியிட்ட சீனிவாசன் செட்டியார் அவரது மக்கள் மற்றும் வாதி மற்றும் அவரது தகப்பனார் வழக்கு 1 மற்றும் 6 வது இலக்க சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து ஏற்பட்ட பாகபத்திரத்தின் சார் பதிவக நகல் வா.சா.ஆ.1 ஆகவும், நானும் பிரதிவாதியும் கூட்டாக தொழில் செய்ய பதிவு செய்த சான்று ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2 ஆகவும் (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால்

ஆட்சேபிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது), 19.04.1976 தேதியிட்ட 2 வது இலக்க சொத்தை கோவிந்தராஜன் பெயரில் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 20.01.1986 ல் என் பெயரிலும் பிரதிவாதியின் பெயரிலும் கிரயங்கள் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆகவும், 18.01.1984 தேதியிட்ட 4 வது இலக்க சொத்தை நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.6 ஆகவும் 12.11.2003 தேதியிட்ட 4 வது இலக்க சொத்தை நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 06.07.2005 ல் 7 வது இலக்க சொத்தில் என் பெயரில் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.8 ஆகவும். 06.07.2005 ல் 7 வது இலக்க சொத்தில் பிரதிவாதி பெயரில் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.9 ஆகவும், 08.01.2007 ல் 8 வது இலக்க சொத்தை நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.10 ஆகவும், 18.02.2008 ல் 9 வது இலக்க சொத்தை நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.11 ஆகவும், 26.05.2008 ல் 10 வது இலக்க சொத்தை நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.12 ஆகவும், 12.10.2010 ல் 11 வது இலக்க சொத்தை நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றதற்கான கிரய சார்பதிவக நகல் வா.சா.ஆ.13 ஆகவும், 06.05.2022 ல் வாதியின் வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு அஞ்சலக ரசீது வா.சா.ஆ.14 ஆகவும் 10.05.2022 ல் அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை நகல் வா.சா.ஆ.15 ஆகவும். வழக்கு சொத்துக்களுக்கான அரசு வழிகாட்டி மதிப்பு கணிணி நகல் வா.சா.ஆ.16 ஆகவும் தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளபடி பரிகாரங்கள் வழங்க பிராத்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)